5

M. 1630, MAY. 1923.

சுயப்பிரகாசத்துணை.

ஸம்ஷுல் மஹறிபா என்னும்

ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2	ருத்ரோற்காரி௵ வைகாசிமீ 1உ 1923௵ மேமீ 14உ	இதழ் 2

Vol. II. No. 2.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	25
அடியார் நிந்தை—மணிமுத்துநாயகம்	26
அடியார் பத்தி—அட்சரலட்சம்	29
அடியாரிலக்கணம்—ஞானக்களஞ்சியம்	35
சாதுசங்க விசாரணை—மணிமுத்துநாயகம்	36
ஞானத்தம்பட்டம்—மணிமுத்துநாயகம்	40
இனியவை கூறல்—ப. வீரப்பத்தஞ்சவராயன்	44
வைத்தியம்—க. ஞானபூபதி	47
புதிய ஜீவிய சந்தாதார்கள்—மானேஜர்	48

இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன்முதலிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலா மேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு	...	ரூபா	7—0—0
அரை பக்கத்திற்கு	,,	,,	4—0—0
கால் பக்கத்திற்கு	,,	,,	2—8—0

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு [illegible]பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ. வீதம் [illegible]ழித்து வாங்கப்படும். எப்போதும் முழுத்தொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திராசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திராசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு, பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத் துணை.

ஸம்ஷூல் மஹறிபா என்னும்

ஞானசூரியன்.

இது ஒரு இனிய மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2] ருத்ரோற்காரி ௵ வைகாசி ௴ 1௳. [இதழ் 2.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன் றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னானந்தங் காண்ட லாகும்.

(தாயுமான வள்ளல்.)

ஞான சூரியன்

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

அடியார் நிந்தை.

விருத்தம்.

பந்த நீங்கிப் பரம னடிமிசை
சிந்தை வைத்த திறலடி யார்களை
நிந்தை செய்தவர் நீள்நிரை யந்தனில்
வந்து மூழ்கும் வகையை விளக்குவாம்.

மெய்ஞ்ஞானிகளாகிய அடியார்கள் பொறுமையோடு பிராரத்துவத்தை அனுபவிக்குங் காலத்தில் முன் தன்னையறியாமற் செய்த கன்மமானது, பரமாகிய மறுமையில் தொடர்ந்து வருக்தாமல் நசிக்கும்படிச் செய்வதற்கு ஒரு மார்க்கமுண்டு. அஃதியாதெனில், அறிவீனர்களாகிய சிலர், தமது புன்கருத்தின்படி மெய்ஞ்ஞானிகள் நடந்துகொள்ளவில்லையென்று அவர்களிடம் பல குற்றங்கள் இருப்பதாகக் கருதிப், பலரிடத்திலும் தூற்றித் தன் வாயில் வந்தபடி இவர் என்ன யோகி! என்ன ஞானி! அந்த தாசியுடன் பேசிக்கொண்டிருந்தார்! இந்தப் பெண்ணுடன் பரிகாசஞ்செய்தார்! நான் பார்த்தேன் என்று கண்டபடியெல்லாம் பிதற்றி, உண்மையைக் கருதச் சக்தியில்லாமல் அவர்கள்முன் அறியாமையாற் செய்த பாவங்களையெல்லாம் இனிமேல் தாம் அனுபவிப்பதற்காக மூட்டை கட்டிப் பத்திரப்படுத்தி வைப்பார்கள்.

பிரபஞ்சத்தவர்கள்; எப்போதும் மடந்தையர்களது சையோகத்தையே மெய்யோகமாகத் தியானித்துக்கொண்டு இருப்பவர்களாதலாலும், ஓர் அழகிய யௌவன ஸ்திரீயுடன் தனித்து சம்பாஷணை செய்யும்போது விரகசன்னதமான வார்த்தைகளையே பிரயோகஞ் செய்பவர்களாதலாலுமே, பரிபக்குவமுள்ள சில பெண்கள் மகான்களுக்கு உபசரிக்கும்போது அந்த மகான்களையும் காமாந்தகாரமுடைய தம்மைப்போலவே கருதி, உண்மையைக் கண்டுபிடிக்கச் சக்தியில்லாமல் அபிப்பிராயமாய் வீண் தூஷணம் செய்கின்றனர். அன்றியும், சூரியனை இருள் அணுகிவிட்டதென்று அவ்விருளையகற்ற ஒரு சிறிய கைவிளக்கு பிரயத்தனம் செய்வதுபோல், ஞானிகள் சரியான வழியில் நடக்கவில்லையென்று அவர்களுக்குப் புத்தி சொல்லித் திருத்த முயலுகின்றனர்.

இராமலிங்க வள்ளல்.

ஓகைமட வாரல்கு லேபிரம பதமவர்கள்
உந்தியே வைகுந்த மேல்
ஓங்குமுலை யேகயிலை யவர்குமுத வாயினித
ழூறலே அமுத மவர்தம்
பாகனைய மொழியேநல் வேதவாக் கியமவர்கள்
பார்வையே கருணை நோக்கம்
பாங்கினவ ரோடுவிளை யாடவரு சுகமதே
பரமசுக மாகு மிந்த
ஊகமறி யாமலே தேகமிக வாடிநீ
ருறுசுவைப் பழ மெறிந்தே
யுற்றவெறு வாய்மெல்லும் வீணர்நீ ரென்றுநல்
லோரைநிந் திப்ப ரவர்தம்
வாகைவாய் மதமற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர்வயித் திய நாதனே.

கைவல்லிய நவநீதம்.

பொறுமையாற் பிராரத் துவத்தைப் புசிக்குநாட் செய்த கன்ம
மிறுமையிற் றொடர்ந்தி டாமன் மாண்டுபோம் வழியே தென்னில்

சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வர்
அறியவ ரறிந்து பூசித் தறமெலாம் பறித்துண் பாரே.

திருமந்திரம்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாவியும் ஆண்டொன் றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி யாணையே.

சீவகசிந்தாமணி.

மல்லன் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரே யன்றிப் பகுத்துணப் பாவிகளும்
அல்குல் விலைபகரும் ஆய்தொடியா ராதியா
வில்பொருதோள் மார்பா விலங்காய்ப் பிறப்பவே.

வளையாபதி.

பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
ருய்யன்மின் உயிர்கொன் றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன.

மஹான்களையும் சிறந்த வித்துவான்களையும் [illegible]ளை யும் அரசர்களையும் எப்போதும் அவர்கள் வசிக்கிற ஊரிலுள்ளோர்கள் கௌரவமாக மதித்து உபசரிப்பது பெரும்பாலும் அருமை. ஏனெனில், கண்ணன் மகன் பொன்னன் தானே! சோமன் மகன் ராமன் தானே! என்று சாமானியமாக எண்ணி யிகழ்ச்சிசெய்வது சகசம். அனேகமாக வெளியூரார்களே அவர்களிடத்திலுள்ள சிறந்த விஷயங்களைக்கண்டு போற்றிப் புகழ்ந்து வணங்கி உபசரிப்பார்கள். உள்ளூரிலுள்ள தெய்வங்களை அவ்வளவு விரும்பாமல், அந்தவூர் மாரியம்மன் விசேடம்! இந்தவூர் காளியம்மன் விசேடம் என்று மருண்டு ஓடியலைவார்கள். ஆனால் விசேடம் என்கிற வார்த்தையில் சேடம் என்றிருக்கிறதை அறியார்கள்போலும் அங்ஙனமே அயலூர் வயித்தியர்கள், மாந்திரீகர்கள் முதலானவர்களையும் இக்கரைக்கு அக்கரை பச்சையென்று நினைப்பார்கள். இதற்கு உதாரணம்:—

நன்னிலம் தாலுக்கா மேல திருமதிக்குன்னத்தில் வசிப்பவரும் சாமிநாதபிள்ளை அவர்கள் புதல்வருமாகிய வீரப்பிள்ளை அவர்கள் விஜயபுரம் கடைத்தெருவுக்குச் சமீபமாய் வரும்போது, கொடிக்கால்பாளையத்திலிருக்கும் பாப்புமஸ்தான் அவர்களைக் கண்டு, ஆனந்த பரவசமுற்று, பலகார பட்சணங்களை வாங்கிவந்து கொடுத்தனர். அதையன்போடு புசித்த மஸ்தான் அவர்கள் தாகத்திற்குத் தண்ணீர் கேட்க, அருகில் வெற்றிலைக் கடை வைத்திருக்கும் ஒரு இஸ்லாமானவரிடம் ஐயா! பாப்பு சுவாமிகள் அருந்துவதற்கு கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டதற்கவர், 'கல்லையே சுவாமியென்று கட்டிக்கொண்டழுகிற நீங்கள் மனிதனைக்கண்டால் விட்டுவிடுவீர்களா? பயித்தியம்பிடித்து அலைகிறவனைச் சாமியென்று சொல்லுகிறீர்களே! இஃதென்ன அநியாயம்! தண்ணீர்கொடுக்க முடியாது' என்று கூறி ஏளனம் செய்தனராம். இப்போது பாப்புமஸ்தான் அவர்களின் உண்மைநிலையை யறிந்தபின் இஸ்லாமானவர்களே அதிகமாகக் கொண்டாடுகின்றனர். காணுமுன் பிணங்குவதும் கண்டபின் வணங்குவதும், உள்ளூராண்டி, பேயாண்டி, பிச்சாண்டியென்று நினைப்பதும், சிலருடைய வழக்கமாக இருக்கிறது. எந்த ரூபத்தோடிருந்தாலும் உண்மையைத் தெரிந்தவர்கள் எங்கிருந்தாவது தேடிவந்து கண்டு வணங்குகிறார்கள்.

விவேகசிந்தாமணி.

தண்டாமரையி னுடன்பிறந்தும் தண்டேனுகரா மண்டூகம்
வண்டேகானத் திடையிருந்து வந்தேகமல மதுவுண்ணும்
பண்டேபழகி யிருந்தாலும் பாரார்புல்லோர் நல்லோரை
கண்டேகளித்தங் குறவாடித் தம்மிற்கலப்பார் கற்றோரே.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

அடியார்பத்தி

சோழதேசத்தில், காவேரி நதியானது சமுத்திரத்தில் கலத்தலால் காவேரி சங்கமம் எனச் சிறப்புப்பெயர் வாய்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் வைசியகுல திலகராய் அவதரிக்க

அடியார் பத்தியிற் சிறந்தவராக ஒருவர் இருந்தார்; அவர் பெய இயற்பகை நாயனார்.

அவர் இல்லறதருமத்தி லிருந்துகொண்டே சிவபத்தர்க விரும்பிய எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு கொடுத்துக்கொண் வருங்காலத்தில் ஒருநாள், திருக்கைலாசபதியானவர், அவ்விய பகையார் அடியார்கள் விரும்பியவை யாவையேனும் அவற்றை இல்லையென்னுமல் கொடுத்தலைச் சகலருக்கும் புலப்படுத்தும் பொருட்டு, ஒரு பிராமண வடிவங்கொண்டு, விபூதி திருமேனி யிலே பிரகாசிக்க, தூர்த்த வேடமுந் தோன்ற, அவர் வீட்டிற்கு எழுந்தருளினர். இயற்பகை நாயனர் அன்பினேடு அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து, அழைத்துக்கொண்டுபோய், விதிப் படி அருச்சித்து, "சுவாமீ, தேவரீர் இங்கே எழுந்தருளியது பூர்வசன்மத்தில் அடியேன் செய்த தவத்தினற் போலும்' என்ருர். அதுகேட்ட ஐயர் இயற்பகைநாயனரை நோக்கி, சிவ னடியார்கள் விரும்பிக் கேட்பன யாவையெனினும் நீர் அவை களை இல்லையென்னுமல் மகிழ்ச்சியோடு கொடுத்தலை நான் கேள்வி யுற்று, உம்மிடத்திலுள்ள ஒருபொருளை விரும்பி இன்றைக் இங்கே வந்தேன். நீர் தருதற்கு இசைவீராகில், அந்தப்பெ ருள் இன்னது என்று சொல்லுவேன்" என்ருர். அதற்கு இய பகைநாயனர் "எப்படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்தி இருக்குமாயின், அந்தப்பொருள் நமது கடவுளாகிய பரமசிவ னுடைய அடியார்களுக்கு உரிய பொருளேயாம். இதைக் குறி துத் தேவரீர் சந்தேகிக்க வேண்டுவதில்லை. திருவுள்ளம் விரும் யதை இன்னது என்று சொல்லியருளும்" என்று சொல்ல, ஐய "உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன்" என்ருர். அ பொழுது இயற்பகை நாயனர் முன்னினும் அதிகமாக மன மகிழ்ந்து வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீர் அடியேனிடத்தி இல்லாத பொருளைக் கேட்காமல் உள்ள பொருளையே விரும்பி கேட்டது அடியேனுடைய பாக்கியம்" என்று சொல்லி, சீக்கிர உள்ளே போய், கற்பிலே சிறந்த தம்முடைய மனைவியாை நோக்கி, 'நான் இன்றைக்கு உன்னை இந்தச் சிவனடியாருக்கு

கொடுத்துவிட்டேன்'' என்றார். உடனே மனைவியார் சற்று மனங் கலங்கிப் பின்னே தெளிந்து, "பிராண நாயகரே, நீர் கட்டளை யிட்டது எதுவோ அதையே நான் செய்வேன். அதையன்றிச் செய்தற்கு உரிய காரியம் எனக்கு வேறொன்று உண்டோ? இல்லை'' என்று சொல்லி, அவரை வணங்க, அவர் தமது மனைவி யார் அங்கு வந்த சிவனடியாருக்கு மனைவியாகுதல் பற்றி வணங்கினார். மனைவியார் போய், அவ்வையருடைய பாதங் களின்மேல விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்றார். அதுகண்ட இயற்பகைநாயனார் மனமகிழ்ந்து அவ்வையரை வணங்கி, "இன் னும் அடியேன் செய்யவேண்டிய பணி யாது'' என்று வினவ ஐயர் "இந்தப்பெண்ணை நான் தனியே கொண்டு போகையால் உங்கள்மேலே பற்றுள்ள பந்துக்களையும் ஊரார்களையும் கடக் கும் வரைக்கும் அவர்களால் எனக்கு ஓரிடையூறும் உண்டாகா திருக்கும்படி, நீர் துணையாக வரவேண்டும்'' என்றார். இயற் பகைநாயனார் அதைக் கேட்டு, "இவர் கட்டளையிடுமுன் நானே நினைந்து செய்யவேண்டிய இக்குற்றேவலைச் செய்யாமல், இவர் சொல்லும் வரைக்கும் தாழ்த்து நின்றது குற்றம்'' என்று நினைத் துத் துக்கித்து, ஆயுதசாலையிலே போய், போர்க்கோலங் கொண்டு, வாளும் பரிசையும் ஏந்திக்கொண்டு, ஐயரிடத்திற்கு வந்து, அவரை வணங்கி, அவரையும் மனைவியாரையும் முன் போம்படி செய்து, தாம் பின்னே போனார்.

அப்பொழுது இயற்பகை நாயனாருடைய சுற்றத்தவர்களும் அவர் மனைவியாருடைய சுற்றத்தவர்களும் இயற்பகை பைத்தி யத்தினாலே தன் மனைவியைக் கொடுத்தானாயினும், அவளை ஒரு வன் கொண்டுபோவது நீதியா'' என்று, தங்கள் மரபுக்கு வரும் பெரும்பழியை நீக்கிக்கொள்ளும்பொருட்டு அவர்களைத் தொட ரக்கருதி, வேல், வில், வாள் முதலிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, சண்டமாருதம்போலத் தீவிரமாக நடந்து, நகருக்குப் புறத்திலே போய், ஐயருக்கு இருபக்கத்திலும் நெருங்கி, ஆர வாரித்து, "ஓ துட்டனே, எங்களுக்குப் பழி வாராதபடி எங்கள் குலப்பெண்ணை விட்டுப் போ'' என்று சொல்லி, அவரை வளைத்

துக் கொண்டார்கள். ஐயர் அதைக்கண்டு, அஞ்சினவர்போல இயற்பகை நாயனாருடைய மனைவியாரைப் பார்க்க, அம்மனைவியார் "சுவாமீ, நீர் பயப்படவேண்டாம். இயற்பகை நாயனார் அவர்களை வெல்லுவார்" என்றார். இயற்பகை நாயனார் அதைக் கேட்டு, "அடியேன் அவர்கள் எல்லாரையும் இப்போது கொன்று போடுகிறேன். தேவரீர் அஞ்சவேண்டாம்" என்று சொல்லி, அங்குவந்த சுற்றத்தவர்களைப் பார்த்து, "நீங்கள் என் வாளுக்கு இரையாவீர்கள். ஒருவரும் எனக்கு எதிர் நில்லாமல் ஓடிப் பிழையுங்கள்" என்று கூற, அவர்கள் "எடா இயற்பகை! நீ என்னகாரியஞ் செய்தாய்? ஊரவர்கள் பேசும் பழிமொழிகளும் நம்முடைய சத்துருக்கள் நகைக்கும் நகைப்புக்கும் நீ சற்றாயினும் வெட்கப்படவில்லை மனைவியைப் பிராமணனுக்குக் கொடுத்தோ நீ சாமர்த்தியம் பேசுவது. நாமெல்லாம் ஒருங்கே மடிவதன்றி இந்தப்பெண்ணைப் பிராமணனுக்குக் கொடுக்கவிடோம்" என்றார்கள். உடனே இயற்பகைநாயனார் அதிககோபங்கொண்டு, "உங்கள் சரீரங்களைத் துண்டம் துண்டமாக்கி உங்களுயிரைச் சுவர்க்கத்துக்கேற்றி ஐயரைத் தடையின்றிப் போகவிடுவேன்" என்று சொல்லி எதிர்க்க; அவர்கள் அந்நாயனாரோடு யுத்தஞ் செய்யத் தொடங்காமல், அவர் மனைவியாரைக் கொண்டு செல்கின்ற ஐயருக்கு முற்பட்டு, அதிக கோபத்தோடும் அவரைத் தடுத்தார்கள். அதுகண்ட நாயனார் கோபங்கொண்டு வாளினாலே, இடசாரி வலசாரியாக மாறி மாறிச் சுற்றிவந்து, அவர்களுடைய தோள்களையும் கால்களையும் தலைகளையும் துணித்து விழுத்தி, பின் ஒவ்வொருவராய் வந்து எதிர்த்தவர்களையும் கொன்று, மேல் எதிர்ப்பவர் ஒருவருமின்றி யுத்தகளத்திலே உலாவினார். பின் இந்த செயற்கருஞ் செய்கையைச் செய்த நாயனார் ஐயரை நோக்கி, "சுவாமி, தேவரீர் அஞ்சாவண்ணம் இந்தக் காட்டைக் கடக்கும் வரைக்கும் வருகிறேன்" என்று சொல்லி, அவரோடு போனார். திருச்சாய்க்காடு என்னுஞ் சிவஸ்தலத்திக்குச் சமீபத்திலே போனபொழுது, ஐயர் இயற்பகை நாயனாரை நோக்கி, "இனி நீர் திரும்பிப் போகலாம்" என்று

சொல்ல, நாயனுர் அவருடைய திருவடிகளை வணங்கி அஞ்சலி செய்து தோத்திரம் பண்ணிக்கொண்டு திரும்பினுர். அப்பொழுது ஐயர் "இயற்பகையே! இங்கே வா" என்று சொல்லி ஓலமிட்டார். நாயனுர் அந்த ஓசையைக் கேட்டு, அடியேன் வந்துவிட்டேன். இன்னும் இடையூறு செய்பவர்கள் உண்டாயில், கொன்று போடுவேன்" என்று சொல்லிக்கொண்டு வர, ஐயர் மறைந்தருளினுர். வந்த நாயனுர் அவ்வையரைக் காணுமல் மனைவியாரை மாத்திரங் கண்டார். பின்பு ஆகாயத்திலே பார்வதி சமேதராகி இடபவாகனத்தில் எழுந்தருளிவந்த திருக்கைலாசபதியைக் கண்டார். ஆராமையினுலே உடனே விழுந்தார்; எழுந்து தோத்திரம் பண்ணினுர். சுவாமி அவரை நோக்கி, "நம்மேலும் நம்முடைய அடியார்கள் மேலும் நிஷ்களங்கமாகிய அன்புவைத்த இயற்பகையே, நீ உன் மனைவியோடும் நம்முடனே வா" என்று திருவாய்மலர்ந்து, அந்தர்த்தானமாயினுர். இயற்பகைநாயனுரும் மனைவியாரும் சிவலோகத்தை அடைந்து, பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள். யுத்தத்திலே இறந்த அவர்கள் பந்துக்களும் வானுலகத்தை அடைந்து இன்பமனுபவித்தார்கள் என்பது பெரியபுராணத்தின் கருத்து. இதுவன்றோ அடியார் பத்தி.

பிரபுலிங்கலீலை.

விள்ளரு நற்சிவ வேடத் தோர்பொருள்
கொள்ளைகொள் கிற்பினுங் குறைகள் கூறினும்
பிள்ளையை யறுப்பினும் பிழைகள் செய்யினும்
எள்ளுரு னெனிலவன் ஈசர்க் கன்பனும்.

பட்டினத்தடிகள்.

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் நானினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே.

அட்சரலட்சம்.

அடியாரிலக்கணப்

(198-ம் பக்கத் தொடர்ச்சி.)

பலதீட்டுக்கு ஒரு முழுக்கு.

வைதீக நிட்டாபரனான ஒருவேதியன், ஒருநாள் ஒருகுளத்தில் இறங்கி நீர்வேட்கையாற் கையினால் தண்ணீர் மொள்ளக், கரைமேலுள்ள நாவல் மரத்தின்மீதிருந்து ஓர் எச்சிற்கொட்டை அதில் விழுந்தது. தாகத்தின் கொடுமையால் அதை அவன் நன்கு பாராமல் தண்ணீருடன் பருகிவிட்டு, பிறகு 'இக் கொட்டை இங்கென்னமாய் வந்தது? பறவையோ! குரங்கோ! இன்னும் ஏதேனும் செந்துவோ போட்டது' என்று யோசித்து அண்ணாந்து அம்மரத்தை உற்றுப் பார்க்கையில் அதில் ஒரு சிறு பையனைக்கண்டு, 'நீயார்?' என்று கேட்க, அவன் 'ஐயா! நான் பறைப்பையன். இதிலேறிப் பழந்தின்று கொட்டைகளை உமிழ்ந்தேன்' என்றான். அதைச் செவியுற்ற அந்தணன் மிக்க வெறுப்பும் விசனமும் அடைந்து, பறையன் எச்சிலைத் தின்ற யான் எவ்வாறு புனிதனாவேன் என்று தவித்துக்கொண்டே வந்து ஊரிலுள்ள சாஸ்திரிமாருக்கு இதனை விளம்ப, அவர்கள் 'ஏகவாராசனத்தோடு கங்கைக்குச் சென்று ஸ்நானம் செய்து வருவையாயின் அப்பாவம் தீர்ந்து நீ பரிசுத்தனாகுவை' என்று புகன்றனர்.

அதைக்கேட்டு மறையோன், அங்ஙனமே செய்வலெனத் துணிந்து பிரயாணப்பட்டு, மூன்றுநாளானபின் ஒரு கிராமத்தில் ஒரு விப்பிரன் வீட்டுத்திண்ணையில் இரவில் படுத்திருந்தனன். அப்போது பகலில் நல்லுணவில்லாமையால் தூக்கம்பிடியாமல் அங்கிருந்த மாடத்திற் கையிட, அதில் ஒருபாக்கு அகப்பட்டது அதனை அவன் வாயிற் போட்டுக்கொண்டு சற்றுநேரம் குதப்பி நறுக்கென்று கடித்தனன். வீட்டுப்பார்ப்பனி அவ்வோசையைக் கேட்டு ஓடிவந்து, 'ஓ! ஐயரே! நீர் படார் என்று கடித்தீரே! அது யாது?' என்று வினவ, அந்தணன் 'அம்மாடத்தில் இருந்த

தோர் பாக்கு' என்றான். அவள் ஆச்சரியப்பட்டு, 'ஐயா! உம்முடைய பல்லுரப்பை என்ன சொல்வேன்? நான் வீட்டிற்குப் போகக் கூடாமையால் நேற்றிரவு இங்குப் படுத்துக்கொண்டு இப்பாக்கை நெடுநேரமளவும் வாயிற்போட்டு ஊறவைத்துக் கடித்துப் பார்த்துங் கடிக்கக்கூடாமல் இம்மாடத்து உமிழ்ந்து போனேன். அதை எடுத்துக் கடித்தீரே! உமதெயிற்றின் திண்மை எனது கண்திருஷ்டி படாமல் நெடுநாள் வாழ்க! என வாழ்த்திப் போயினள்.

பின்பு மறையோன், 'அந்தோ! நமக்குப் புண்ணின்மேற் பூச்சியுங் கடித்ததே! யென்று வியாகூலப்பட்டுக் கொண்டே யெழுந்துபோய், உதயமாகி ஐந்தாறு நாழிகைக்கு மற்றோர் ஊரில் ஒரு பூசுரன் வீட்டுத் தெருத்திண்ணையில் உட்கார்ந்தனன். குளத்துக்குப் போயிருந்த அவ்வீட்டு விதவை வந்து பார்த்து, 'ஐயா! இன்றைக்கோர் பிராமணனுக்கு அன்னமிடவேண்டும்; யாரையுங் காணேம் என்றிருந்தேன். தெய்வாதீனமாக உம்மைக் காணச் சந்தோஷமாயிற்று. நீர் இங்கேயே அமுதுகொள்ளும்; எழுந்து குளத்துக்குப்போய் ஸ்நான முதலியன முடித்துக்கொண்டு வாரும்' என்றனள். அதுகேட்ட விப்பிரன், சோறு அகப்படுகிறதாயினும் எச்சின்மேலெச்சில் நேரிட்டதற்கு என்ன செய்யலாமென்று சிந்தித்துப், பலதீட்டுக்கு ஒரு முழுக்கு ஆதலின் கங்கா ஸ்நானமே எல்லாவற்றிற்கும் பிராயச்சித்தமென்று தேறி, முழுகிவந்து சாப்பிட உட்கார்ந்தனன். அவ்வமங்கலி, சோறுகறி முதலியன பரிமாறி உபசரித்துப் புசிப்பித்து, 'ஐயா! நான் உங்களுக்குப் போதுமானபடியே சமைத்து வைத்துத் தண்ணீர் கொண்டுவரப் புழக்கடை வாய்க்காலுக்குப் போயினேன். அதற்குள் ஏதோ ஒருநாய் வந்து அதிற் கொஞ்சம் தின்றுபோயிற்று; என் செய்வேன்? பொறுத்துக்கொள்ளுங்கள்' என்று உபசார வார்த்தைகள் சொல்லினள்.

பார்ப்பானோ, 'முதலிற் பறையன் எச்சில்! இரண்டாவது உதகியெச்சில்! மூன்றாவது சுணங்கன் எச்சில்! இப்படி ஒன்றின்

மேல் ஒன்று அசுத்தமே நேரிட்டு வருவதனல் இனிபெங்கும் உணவு கொள்வதுமில்லை சயனிப்பதுமில்லை என்று மனவுறுதி கொண்டு, நேரே கங்கைக் கரைக்கேகிக் கங்கையைத் தரிசித்து, மணிகர்னிகா கட்டம்முதலான துறைகளிற் பிராமணர் அனேகர் ஸ்நானம் செய்வதும் பூசை நடத்துவதும் புராணம் படிப்பதுமா யிருந்ததனுல், அவ்விடங்களிற் சென்று தன் பாவங்களுக்குச் சங்கற்பஞ் செய்துகொண்டு ஸ்நானஞ் செய்ய வெட்கப்பட்டு இவைகளுக்குச் சிறிது தூரத்திலிருந்த தோர்துறையில் முழுக எத்தனித்தனன்.

அத்துறை, பறையர் தங்கள் தங்கள் இனத்தாருடைய பிரேதங்களின் எலும்புகளைக் கொணர்ந்துபோட்டு மூழ்கிப்போகும் இடமாயிருந்தது. ஐயோ! இப்பேதைப் பார்ப்பான் அதை யறியாமல் ஆழமான நீரிலிறங்கி அமிழ்ந்து *அகமரீஷண சூக்தம்

(இன்னும் வரும்.)

ஞானக்களஞ்சியம்.

சாதுசங்க விசாரணை.

கலிவிருத்தம்.

போது சங்கம் புனையும் அவாவுன
மாது சங்க மகன்று மலியருட்
சாது சங்க மடைந்தவர் தந்திறம்
பாதுசங்க முடன் பகர் வாமரோ.

சாதுசங்கம் என்பது சத்துக்களாகிய சன்மார்க்கமுடையவர்களது கூட்டம் என்று பொருள் தந்து நிற்கும்.

சாதுக்கள், சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களில், பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை முதலிய தாமதகுணச் செய்கைகளும், மனவூக்கம், விவேகம், வீரம், தவமுயற்சி, தருமம், தானம், கல்வி, கேள்வி முதலிய இராசதகுணச் செய்கைகளும் நீங்கி; ஞானம், கிருபை, தவம், சாந்தம், சத்தியம், அடக்கமுடைமை, பொறை, ஐம்பொறியடக்கல் முதலிய சத்துவகுணச் செய்கையையே தமது கடமையாக எண்ணி நடப்பவர்கள்.

---

* இது பரிசுத்தத்திற்காக ஜலத்திற்குள் நின்றுசெய்யும் ஜெபம்.

இத்தன்மை யுடையவர்களது குழாத்தில் ஒரு சாமானிய மனிதன் அடுத்துப் பழகினாலும், மயக்கத்தைத் தரும் பனைமரத்தின் கள்ளானது சுண்ணாம்பு சேர்ந்தவுடன் 'பதனீர்' என்னும் பானமாகி விடுவதுபோலவும், உப்புமயமான சமுத்திரத்தின் உவர்நீர் மேகத்தினால் சுத்தோதக மாகிவிடுவதுபோலவும், அந்தச் சாதாரண மனிதன் பரிசுத்தனாகிவிடுவான்.

திருக்குறள்.

மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

இராமாயணம்.

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரென்பது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உறைத்துறைத் தோடி
இருண்ட கல்லையும் தன்னிற மாக்கின இரதம்.

மகாமேருவைச் சார்ந்த காகமும் பொன்னிறமாகின்றது. பாலோடு சேர்ந்த நீரையும் பாலாகவே எண்ணப்படுகின்றது. பூவோடு சேர்ந்த நாரும் மேன்மை அடைகின்றது. நெருப்பைச் சார்ந்த பலவித விறகுகளும் நெருப்புமயமாகிப் பிரகாசிக்கின்றன. இரசவாத வித்தையால் இரசத்தைச் சேர்ந்த செம்பும் பொன்னாகிறது. அவைபோல் மகான்களது சங்கத்தைச் சார்ந்த சாமானிய மனிதர்களும் மகான்களாகவே மதிக்கப்படுகிறார்கள். ஆனால் நல்லோர்களைச் சேர்ந்து கெட்டவர்களும் நல்லவர்களாவதுபோல், கெட்டவர்களைச் சேர்ந்து சில நல்லவர்களும் கெட்ட நடவடிக்கை யுடையவர்களாகி விடுகிறார்கள்.

நீர் நிரம்பிய ஒரு தடாகத்தில் நாலுகுடம் பசுவின் பாலைக் கொண்டுபோய் ஊற்றினால் பாலின் சொரூபமின்றி நீர்மயமாகவே ஆகிவிடும். ஒருகுடம் பசும்பாலில் ஒருபடி சலத்தை விட்டால், நீர்மயமின்றிப் பால்மயமாகவே ஆகிவிடும். அதுபோல் நன்மை அதிகரித் திருக்கிறவர்களிடத்தில் அதாவது அரையரைக்கால் ($\frac{5}{8}$) பங்கு நன்மையுடையவர்களிடத்தில்சாலேயரைக்கால் ($\frac{3}{8}$) பங்கு தீமையுடையவர்கள் சேர்ந்தால், நன்மை அதிகரித்திருப்பதால்

தீயவர்களும் நல்லவர்களாவார்கள். மேற்கூறியபடி தீமை அதிகரித்தவர்களிடத்தில் நன்மை குறைந்தவர்கள் சேர்ந்தால், நல்லவர்களும் தீயவர்களாவார்கள். ஆகையால் தம்மில் உயர்ந்தோர்களிடத்திலேயே பழகவேண்டும்.

திருக்குறள்.

நல்லினத்தி னூங்குந் துணையில்லைத் தீயினத்தின்
அல்லற் படுவ தூஉ மில்.

குழந்தைகள், தமது தாய்தந்தைகள் எவ்வித வார்த்தைகளை உபயோகிக்கிறார்களோ அவ்வித வார்த்தைகளையும், இன்னும் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் எப்படி எப்படிப் பேசுகிறார்களோ அந்த வார்த்தைகளையும் அதன் கருத்து இன்னதென்று அறியாமலே கற்றுக்கொள்ளுகின்றன. அன்றியும் அவர்கள் செய்கிற நடை, உடை, பாவனை, சாடை, சைகை முதலிய அனைத்தையும் ஒருவர் பிரயத்தனமின்றி எளிதில் கற்றுக்கொள்ளுகின்றன.

சில சமயங்களில் நம்மைப் பார்த்து மற்றவர்கள் படிக்கிறார்கள். மற்றவர்களைப் பார்த்து நாம் படிக்கிறோம். அதாவது ஒரு மனிதன் ஒருவிதமான வஸ்திரத்தையோ ஆபரணத்தையோ வேறெதையோ தரித்துக்கொள்ளக் கண்டால், அதில் நமது மனம் பற்றினவுடனே நாமும் அவ்வாறு செய்துகொள்ளப் பெரும்பாலும் பிரயத்தனப்படுகிறோம். நாம் அவ்வாறு எதையாவது அணிந்துகொள்ளக் கண்டால், பிறரும் அவ்விதமாகவே விரும்புகிறார்கள்.

இக்காலத்தில் அனேக இளைஞர்கள், மேனாட்டார்களைப் போல் தலைமயிர்களைப் பற்பலவிதமாகக் கத்தரித்து மினுக்கெண்ணெய் தடவித் தன்னை அழகுபடுத்திக் கொள்வதாக எண்ணிச் செய்கிறார்கள். பறையர், ... முதலிய சிலர், சாராளர் என்னும் பொருள்படத் தம்முடைய பெயருடன் பிள்ளை என்னும் பட்டத்தைச் சேர்த்துப் பிள்ளைமார்கள் ஆகிறார்கள். இவையனைத்தும் ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்துகொள்வதேயன்றி வேறில்லை.

ஆகையால் நாம் நன்குமதித்து யார் யாரிடத்தில் பழகு கிறோமோ, அவரவர்கள் நடைகளே பெரும்பாலும் நமக்கு வந்து சேரும் என்பதற்கு ஐயமில்லை.

மேற்குலமாக எண்ணப்பட்ட சிற்சிலர்கள் தத்தம் தொழிலைச் செய்யவேண்டியதிருக்கக், கலிகால விபரீதத்திற்குத் தக்கபடி சிலர் வேடங்கட்டிக் கூத்தாடுவதும்; கடுமையாய் நீக்கப்பட்ட மது, மாமிசம், மச்சம் முதலானவைகளைப் புசிப்பதும, தம்மில் எத்தனையோ மடங்கு தாழ்ந்த வகுப்பாக எண்ணப்பட்டவர்கள் வீட்டில் நாடகர்கள் பேசிக்கொள்வதுபோல் உபசாரம் பேசிக் காப்பித் தண்ணீருக்காகக் காத்திருப்பதும்; தொடக்கூடாது என்று விலக்கப்பட்டதும் சர்மத்தினால் இணைக்கப்பெற்றதுமான மிர்தங்கம், கெஞ்சிரா முதலியவைகளைத் தோளில் தாங்கிப் பகிரங்கமாகத் தெருவில் சஞ்சரிப்பதும்; 'பன்றியுடன் சேர்ந்தால் கன்றும் பீதின்னும்' என்னும் முதுமொழிக்கிணங்க, அறிவில் தம்மினும் தாழ்ந்த வகுப்பினரிடத்தில் சார்ந்ததனாலன்றோ? அங்ஙனம் ஏற்படுகின்றது.

முற்காலத்தில் மேற்குலம் என்று பேர் வைத்துக்கொண்ட சுயநலப் புலிகளால் கீழ்க்குலம் என்று எண்ணப்பட்ட ஏனைய வருணத்தவர்கள், தாங்கள் வம்ச பரம்பரையாகப் புசித்து வந்த மதுமாமிச பட்சணங்களை யறவே ஒழித்து வைதிக நெறியை அநுசரித்து மேம்பாடுபெற்று நன்னிலைமைக்கு வருவது, அவர்கள் தம்மினும் அறிவில் உயர்ந்தவர்களைச் சார்ந்ததனாலன்றோ?

"TELL ME YOUR FRIEND AND I WILL TELL YOU WHAT YOU ARE."

என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. அதன் பொருளாவது, 'உன் சிநேகிதன் இன்னாரென்று சொல். நான் உன் நடக்கை முழுவதையும் சொல்லுகிறேன்' என்பதாம். நமது ஔவைப் பிராட்டியாரும் 'சான்றோரினத்திரு' எனவும், 'சேரிடமறிந்து சேர்' எனவும், 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' எனவும், தீயாரைக்

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

ஞானத்தம்பட்டம்.

(மூன்றாவது சாமம் பறையறைதல்.)

(107-ம் பக்கத் தொடர்ச்சி.)

அறந்தழைத் தோங்க வாய்த்தற் கருமையா மனிதராகப்
பிறந்தவ ரிளமைமூப்புப் பிணிகளி னியலும் நீங்கிச்
சிறந்தமெய்ப் பொருளைச் சோதி வடிவமாய்த் தெரிசித்தேனே
மறந்தணந் துய்யவேண்டும் வகைகளும் விளக்கு வாமரல்.

திடும்! திடும்!! திடும்!!!

மனிதர்ராகப் பிறந்தவர்கட்கு, பாலியம், எவ்வனம், கௌமாரம், வார்த்திகம் எனப் பருவம் நான்காம். அவற்றுள், (7) வயது வரை பாலியம் எனவும், (8) முதல் (16) வயது வரை எவ்வனம் எனவும், (17) முதல் (32) வயது வரை கௌமாரம் எனவும், (33) முதல் ஆயுள்வரை வார்த்திகம் எனவும் வழங்கப் பெறும்.

பாலப்பருவமானது, மாலைக்காலத்தில் தோன்றும் செவ்வானத்தைப் போன்றும் இந்திர தனுவைப் போன்றும் தோன்றி மறையும். பாலப்பருவத்தை யௌவனப்பருவம் விழுங்கிவிடும். அழகிய யௌவன பருவத்தை கௌமாரப்பருவம் விழுங்கிவிடும். போக போக்கியங்களை அனுபவிக்கும் கௌமாரப் பருவத்தைத் துன்பத்தை உண்டாக்கும் மூப்பு விழுங்கிவிடும். மயக்கமும் வியாதியும் மலிந்திருக்கும் வார்த்திகம் வந்துவிட்டால், இரண்டாம் விவாகத்தில் வந்த மனைவியால் முன்னுள்ள மனைவியானவள், நாயகன் மனதை விட்டு நீங்கிவிடுவதுபோல், முதிர்ந்து சிறந்த பேரறிவும் பிரிந்துபோம்.

மகாராஜா துறவு.

விருத்தபருவ மிகத்துன்பம் விளங்குமிளமை யிரண்டவையின்
வருத்துபிணியின் மிகத்துன்பம் வளமையிளமை மூன்றுக்கும்
கருத்ததறியாக் குழந்தையென்றுங் குமாரமென்றுங் காளையென்றும்
அருத்தமறியா ததிற்றுன்ப மடையும்பாலப் பருவத்தில்.

(1) பாலப்பருவமானது, பலவகை மாந்தம், பட்சிதோஷம், கணை, பிரளிமுதலான வியாதிகளால் வருந்தவும், ஓடுகின்ற சர்ப்பம் தேள் முதலிய விஷசெந்துக்களையும் பிடிக்கவும், மண் முதலானவைகளைப் புசிக்கவும், ஆகாயத்திலுள்ள சந்திரனை வா! வா! வென்று கூப்பிடவும், நெருப்பு, விளக்கு முதலானவைகளைத் தீண்டவும், உபாத்தியாயர், மாதா, பிதா, முன்பிறந்தார், உறவினர் முதலானவர்களுக்குப் பயந்து நடுங்கவும், ஆகிய இவைகளை நன்று தீது என்றுணராது அறியாமையால் வரும்படிச் செய்யும்.

(2) எவ்வனப் பருவமானது, பாலப்பருவத்திலுள்ள சிற்சில அனர்த்தங்களைக் கடந்து, மீட்டும் உபாத்தியாயர், மாதா, பிதா முதலானவர்களின் தண்டனைக்குட்பட்டு வருந்தியும், விளையாடல் புரியும் காலத்துச் சிறுவர்களால் அடி, உதைபட்டும், சில ஆடல்களால் கைகால் முறிந்தும் துன்புறச்செய்யும். இப்பருவத்தின் இறுதியில், மன்மதன் என்னும் பேய்பிடிக்க, மனமானது கலக்கமுற்று நலியும் காமம் என்னும் தாகம் அதிகரிக்க, யுவதிப் பருவம் அடைந்த மாதர்களது சரீரமென்கின்ற பாலைநிலத்தில் ஓங்கிவளரும் அழகாகிய கானல் என்னும் பேய்த்தேரை நீரென்று கருதி, பருக விரும்பும்.

மகாராஜாதுறவு.

தந்தைதாயா ராசிரியர் தாங்கள் முனிதல் தனக்கஞ்சிச்
சிந்தை கலங்குங் கவுமாரஞ் சிறந்தகாளைப் பருவத்தின்
முந்துபசிநோய் காமநோய் முழுசித் தணிக்கப் பொருள்தேட
இந்தப் புவனத் திரவுபக லிடையறாத தொழிற்றுன்பம்.

(3) கௌமாரப் பருவமானது, எவ்வனப் பருவத்தின் இறுதியில் தோன்றி வளர்ந்த ஆசையால், மன்மதன் என்கின்ற பேயோடு நோயும் பிடித்து மனங்கலங்கி, அறிவுமயங்கி,

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென் றெண்ணாமல் சுகமென்று நாடும்இத் தூர்ப்புத்திக்கு
ஏதென் றெடுத்துரைப் பேனிறைவா கச்சி யேகம்பனே.

என்று அருட்பெருஞ் சித்தராக விளங்கும் நமது பட்டினத்தடிகள் கிருபாநோக்கம் பாலித்து பிற்காலத்தவர்களாகிய நமக்காகத் திருவாய்மலர்ந்துள்ள வாக்கியாமிர்தத்தை கொஞ்சநேரமேனும் சிந்தித்து உணர்ந்து அறம் என்னும் தவஞ்செய்ய முயலாமல்,

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவழிக்குங் கொள்கைபோல்—ஒண்டொடீ
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலத்து
மாதர்மேல் வைப்பார் மனம்.

நாயானது எலும்பையே இனிய உணவாக விரும்பிப் புசிப்பது போல், மாதர்களது கைமோகத்தையே மெய் யோகமெனக் கோறி விரகசன்னதமேறி,

எண்ணெய் தடவி வாரிச்சீவி சிக்கெடுத்து ஒழுங்குசெய்யாத காலத்து, மயிர்ச்சிக்குநாறி ஈரும்பேனும் வதியப்பெற்ற அருவருக்கத்தக்க தலைமயிரை, மேகத்தையும், கமுகம்பாளையையும், கொன்றைக்காயையும், கூந்தற்பனையையும், உகாந்த விருளையும், கரியமணலையும், கொடிப்பாசியையும், கருமை பொருந்திய வண்டுக் கூட்டங்களையும் பழித்துச் சாந்து, சவ்வாது, சம்பங்கி எண்ணெய் முதலிய வாசங்கடவி மல்லிகை, முல்லை, இருவாட்சி, மருக்கொழுந்து, பாரிசாதமுதலிய பல மலர்களைச் சூடிச் சந்திர பிறை சூரியபிறை அணிந்து விளங்கும் கூந்தல் எனவும்,

சீறப்புராணம்.

மங்குலிற் பெருகி விடத்தினுங் கருகி
வரியற வினுமினு மினுத்துத்
தங்கிய விதழித் திரளினுந் திரண்டு
சைவலத் தொடரினுந் தழைத்துக்
கொங்குறக் குழன்று நெறித்துவார்ந் தொழுகிக்
குவலயத் திளைஞர்கண் வழுக்க
எங்கள்நன் னயினர் முன்னைநாள் அழைத்த
இருளினும் இருண்டமைக் குழலாள்.

பூனைமயிர்கள் முளைத்து அட்டகோணலாக உள்ள நெற்றியை, மூன்றும் பிறையாகிய இளஞ்சந்திரனையும் வளையுளிபின்

வளையையும் செவ்வகத்தி மலரையும் பழித்து கஸ்தூரித் திலத மிட்டுப் பிரகாசிக்கும் அழகிய நெற்றியெனவும்; புழுவெட்டிய மயிர் கலந்து வளைவின்றிய புருவத்தை, இந்திர வில்லையும், சேவலின் அலகையும் பழித்த புருவம் எனவும்; சீயொழுகி குறும்பி மலிந்து நாறுகின்ற காதை, வள்ளைக்கொடியையும், கத்திரிக் கோலையும் பழித்த செவிகள் எனவும்; நீரும் சளியும் ஒழுகி மலம் உண்டாகின்ற மூக்கை, எள்ளின் பூவையும், குமிழம் பூவையும், சண்பக மலரையும், பாரிசாத மலரையும் பழித்த நாசி எனவும்; பீளையும், காமாலை, காசம், கண்வலி, கண்பூ, கண்புகைச்சல், கண்படலம், மாலைக்கண், ஓட்டுக்கண், மலங்கு கண், கண்கட்டி, குந்தம், கண்குருடு, கண்குத்து, வெள்ளெழுத்து முதலான விபாதிகளும் வருத்தாநின்ற நேத்திரத்தை வேலையும், சேற்கெண்டையையும், வாளாயுதத்தையும், நீலோற்பலத்தையும், தாமரையையும், எமனையும், சமுத்திரத்தையும், அம்பையும், பாளையையும், மாவடுவையும், விஷத்தையும் பழித்த மைதீட்டப்பெற்ற கண்கள் எனவும் கூறுகின்றனர். இக்கருத்தை அநுசரித்தே,

திருக்குறள்.

கண்டா ருயிருண் ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று.

என்பதற் கிணங்க,

சீறாப்புராணம்.

நீற்றிளம் பிறையுங் கணிச்சியின் வளைவுங்
இணர்ந்தசெவ் வகத்திமென் மலரும்
தோற்றிடத் தோற்றி விளங்குநன் னுதலாள்
சுடருமுள் வாரணத் தலகு
மாற்றருந் தனுசுங் கருங்கொடி யெதிர்வு
மாற்றிமைக் கட்கடற் கரையின்
மேற்றிகழ் கரிய பவளமென் கொழுந்தாய்
விளங்கிய செழும்புரு வத்தாள்.

வள்ளையை வாட்டி யூசலே யசைத்து
மண்ணெழி லாடவ ருயிரைக்
கொள்ளைகொண் டடலங் குழைப்பதற் கன்றே
குழையெனும் பெயரிடுங் குழையான்
எள்ளையுஞ் சிறந்த குமிழையும் வாசத்
தினியசண் பகமலர் தனையும்
விள்ளருங் கானத் திடையலர் படுத்தி
விலங்கிட விலங்கிய குமிழாள்.

மடற்குழை கிழித்துத் தடக்குழல் குழைத்து
வரியளி யினைச்சிறை படுத்திக்
கடற்குளந் தேரு தலைதாச் செய்து
கணையயில் கடைபடக் கறுவி
விடத்தினை யாவப் படத்திடை படுத்தி
மீனினம் பயப்படத் தாழ்த்தித்
திடக்கதிர் வடிவா ளெனக்கொலை பழகிச்
செவந்தரி படர்ந்தமை விழியாள்.

என்று கூறுகின்றது.

(இன்னும் வரும்)

மணிமுத்துநாயகம்.

இனியவை கூறல்.

இனியவை கூறுதலாவது — தமது மனதிலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கேட்போரது செவிகளுக்கும் மனதுக்கும் இனிமையையும் அவர்களுக்கு நன்மையையும் கொடுக்கக் கூடிய வார்த்தைகளைக் கூறுதலாம். அவ்வித இனிமையான சொற்கள்தான் நல்லார் பொல்லார் மூத்தார் இளையார் உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரையும் வசப்படுத்தும் வசிய மந்திரமாம். அதிக கோபத்தோடும் சீறிவரும் நாகத்தை அடங்கச் செய்யும் மந்திரத்தைப் போலவே, சீறிவரும் பகைவர்களையும் சினமடக்கிச் சாந்தப்படுத்துவதும் அவ்வினிய சொற்களேயாகும்.

தர்மமாவது தம்மைக் கருதிவருபவரை முகமலர்ச்சியோடும் இனிது நோக்கியும் நெருங்கியபோது வஞ்சனையின்றி அன்புடனே மாதுர்யமான சொற்களை வழங்குதலேயாம். அன்றி

ஏராளமான தானதருமங்களைச் செய்தும் கொடுஞ் சொற்களை வழங்குவாராயின் ஏற்போரது மனம் புண்படுவதால் அவ்வித தானதர்மங்களால் யாதொரு பயனுமில்லாமற் போகும். ஆகையால் அத்தன்மையான தானதர்மங்கள் செய்யா தொழிதலே சாலச் சிறந்ததாம்.

ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்
முப்பழ மொடுபாலன்னம் முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே. (விவேகசிந்தாமணி)

தம்மை யேற்பவர்க்கு பொருளில்லாதவர்கள் இல்லையென்று சொல்லுதல் பழிப்பல்ல. அது உலக இயற்கையேயாகும். அன்றித் தம்மை யேற்பவர் உள்ளமகிழும்படி இன்சொற் கூறவும் மதுரவசனமும் ஐயா! அம்மா! சிலர் தம்மையேற்று வந்தவர்க்கு ஒன்றும் கொடுக்காவிட்டாலும், இன்சொற் கூறாவிட்டாலும், கர்ண கடூரமான வார்த்தைகளை கேட்போர் அஞ்சும்படியாக கல்லெறிந்தாற்போலும் சரமாரியாகப் பிரயோகிக்கிறார்கள். என்ன கொடுமை! என்ன அறியாமை!!

"ஈகை யரிதெனினு மின்சொலினும் நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம் மா.

என்பது குமரகுருபர சுவாமிகள் வாக்கு.

குயிலானது தனது இனிய குரலையெடுத்துக் கூவுமானால் ஜனங்கள் அதிகப் பிரீதியோடும் கேட்டுக்கேட்டு ஆனந்திப்பார்கள். அன்றி கழுதையானது சந்தோஷத்தினால் தனது இனிமையான குரலைக்கொண்டு கத்துமானால் விரும்பிக் கேட்பாரும் உண்டோ? சீச்சீ யென்று தடியாலடித்துத் துரத்துவார்கள். ஏனையா? ஜனங்களுக்கு குயிலானது என்ன உபகாரம் செய்தது? கழுதை என்ன அபகாரம் செய்தது? ஒன்றுமில்லையே. எல்லாம் வாக்கு நயமல்லவா?

மென்மதுர வாக்கால் விரும்புஞ் சுகங்கடின
வன்மொழியி னாலிகழு மண்ணுலகம். நீதிவெண்பா.
இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே. நன்னெறி.

கடலானது குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனைக்கண்டு பொங்குவதேயன்றி வெப்பமான கிரணத்தை வீசும் சூரியனைக் கண்டு பொங்குவதில்லை.

துஷ்டமிருகங்களும் இனிய சொற்களால் வசப்படுகின்றன. சினத்தால் சீறிவருகிற பாம்பும் அப்பா, நாகப்பா, சும்மா போடா என்றால் அடங்கிப் போய்விடுகிறது. கோரமாகப் பாயவரும் மூர்க்க நாய்களையும் மிருதுவாக ரோஸ், ரோஸ் என்று இனிய வார்த்தைகளைச் சொல்லிக் கூப்பிட்டால் வாலைக் குழைத்துக் கொண்டு அருகில் வந்துவிடுகின்றன. இன்னும் ஆடுமாடுகளும், அம்மாவா! அப்பா வா! என்று வளர்ப்பவர்கள் நயமாகக் கூப்பிட்டுத் தடவிக்கொடுப்பதால் எவ்வளவு மூர்க்கத்தன்மை யுடையன வாயினும் அடங்கி நடந்துதவுகின்றன. ஆகையால் உலகம் இனிய மொழிகளாலேயே அடக்கமாகிறது. "ஐயம்பட வுரை" என்னும் ஔவை வாசகம் உணரத்தக்கது.

கோபம் வந்தகாலத்தும் எதிரிகளிடத்தில் கொடிய வன்சொற்களைப் பிரயோகித்தலால் மேலும் மேலும் தீராச்சமர் விளையுமே யன்றி ஒருபோதும் சாந்தமுண்டாவதில்லை. எதிரி நம்மை எதிர்க்கக் கல்லாயுதம் எடுத்தால் நாம் வில்லாயுதம் எடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை. வில்லாயுதம், வாளாயுதம் வெற்றி யடையுமென்ற திண்ணமில்லை. நயமான சொல்லாயுதத்தை நீட்டி, வணக்கமென்னும் வில்லிற்பூட்டி, இனிய குரலென்னும் நாணைக்கோட்டிப், பிரயோகஞ் செய்வோமாயின் ஒரு ஆயுதமும் இதன் முன்னில்லாமல் ஓட்டி எதிரியையும் தன்னிடம் கொண்டுவந்து சேர்க்கும். இவ்வித வலிமையுள்ள ஆயுதமான இனிய சொற்களெல்லாம் இருக்கவும், ஔவையுண்ட நெல்லிக்கனிபோன்ற அமுர்தமயமான கனிகளெல்லாம் நிறைந்த தோட்டத்தில் எட்டிக்காய்போன்ற நஞ்சான காய்களை விரும்புவதுபோல் கர்ண கடூரமான வன்சொற்களை வழங்குவது அறியாமையல்லவா?

(இன்னும் வரும்)

ப. வீரபத் தந்தவராயன், கருவேலி.

(ஆபத்சகாயம்)

தாம்பூலத்தின் குணம்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய இம்மூன்றும் சேர்ந்தது சாதாரணத் தாம்பூலமாம். இத்துடன் காசுக்கட்டியென்னும் காய்ச்சுக்கட்டி ஏலம், சுக்கு, கிராம்பு, லவங்கப்பட்டை, வால்மிளகு, சோம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, பச்சைகற்பூரம் கஸ்தூரி வகையறாக்களைச் சேர்த்துப் பன்னீர் தெளித்துப் பக்குவம்செய்து உபயோகிப்பது பரிமளத் தாம்பூலமாம்.

வெற்றிலையின் குணம்.

கம்மாறுவெற்றிலை ரசத்தால், சகல தோஷம் சிரோபாரம், சன்னி, மந்தாக்கினி, சுரம், விஷம், வயிற்றுவலி, உப்பிசம் முதலான வியாதிகள் நீங்கும்.

கற்பூர வெற்றிலை போன்ற காரமுள்ள வெற்றிலை ரசத்தால், கபம், சீதளம் காணுக்கடியின் துர்க்குணம் முத்தோஷமும் நீங்கும்.

பாக்கின் குணம்.

கொழும்பு தேசத்திலிருந்து வரும் முழுக்கொட்டைப் பாக்கினால் கோழை, மலம் மலப்பையின் அடியிலிருக்கும் கிருமி இவை நீங்கும். சுரநோயுடையவருக்கும் ஔஷதம் சாப்பிட்டவருக்கும் வாயிற் போட்டுக்கொள்ள உதவும் அதிகமாகத் தின்றால் சோகை என்னும் நோய்வரும். அதனால் சரீரமுழுதும் வெளுக்கும் ஒரு இளங்கொட்டைப் பாக்கைத் தின்பவருக்கு தொண்டையில் கோழை அதிகமாக உண்டாகும். மிக இளம் பிஞ்சு அதிக முதிர்ச்சி புதிய பச்சை புழுவாடல் இவ்விதப் பாக்கைத் தின்னக்கூடாது.

சொற்றைப் பாக்குகளை இடித்து நல்லதண்ணீரில் 1 நாள் ஊறவைத்து 100 தடவை கழுவி உலர்த்தி அதில் ஏலங்கிராம்பு

(இன்னும் வரும்) க. ஞானபூபதி.

நமது ஞானசூரியன் பத்திரிகையின் புதிய ஜீவிய சந்தாதார்கள்.

திருச்சி பாலக்கரையிலிருந்து தற்காலம் மதுரை பசுமலையில் வசிக்கும் ஸ்ரீமான். முத்துக்கொத்தனார் அவர்கள் நிகரில்லாத நமது ஞான சூரியனுடைய அருமை பெருமைக்காக வியந்து ஒருவருட சந்தாவை முன்பணமாக மணியார்டர் செய்ததுடன் அந்த மணியார்டர் கூப்பனில் நமது ஞான சூரியனுக்கு ஜீவிய சந்தா அனுப்ப நினைக்கிறேன் என்றும் (31–5–23-ல்) எழுதிய நிருபத்தில் தங்களுடைய ஞான சூரியன் பத்திரிகையை விரிவாக்க முன்வரவும், சந்தாதார்கள் சேர்க்கவும் எனக்கும் திருச்சி பீமநாயக்கன் பாளையம் செட்டித்தெரு ஸ்ரீமான். மு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கும் பிரியம். அதன் அறிகுறியாக கூடிய சீக்கிரம் ஜீவிய சந்தாத் தொகையை அனுப்புகிறேன் என்று எழுதியிருக்கிறார்கள்.

நாகை வெளிப்பாளையம் வில்லேஜ் முன்சீபும், 'ஜனமெலாமகிழும் இனிய வசனாமிர்த' சாகரருமாகிய ஸ்ரீமான். **C. V. R.** பெருமாள் உடையார் அவர்கள் நமது ஞான சூரியனுக்கு ஓர் உயர்தரப் போஷகப் பிரபுவாக விரும்பியிருப்பதாய் நமது நண்பர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நமது ஞான சூரியன் முன்னேற்றம் அடையும் விஷயமாக நல்லபிப்பிராயம் கொண்ட அன்பர்கள் யாவருக்கும் கடவுள் எல்லா நன்மைகளையும் கொடுத்து வாழச்செய்வாராக.

நமக்கு நண்பராயிருக்கும் ஒவ்வொருவர்களும் நமது ஞான சூரியனுக்கு தாங்கள் சந்தாதார்களாகச் சேருவதுடன் தங்கள் நண்பர்களையும் புதிய சந்தாதார்களாகச் சேர்த்துக் கொடுப்பார்களாயின் அவர்களுக்கு அது சிரமமான காரியமல்ல; ஆனால் அது ஒரு பேருபகாரமாயிருக்கும்.

மானேஜர்.

மதிப்புரை.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இப்பெயர் புனைந்த ஒரு மாத சஞ்சிகையில் முதல் இரண்டு இதழ்கள் நமது பார்வைக்கு வந்தது. இது டாக்டர் அன்னு தாமஸ் அம்மாள் அவர்களால் எழுதப் பெற்று மாதர்கள் திலகமாய் விளங்கும் சென்னை கவர்னர் பெருமாட்டி வில்லிங்டன் அம்மாள் அவர்களுடைய முகவுரையும் தீட்டப்பெற்றுள்ளது. இதில் குழந்தைகள் வளர்க்கும் விதமும் அவர்களை எவ்விதப் பயிற்சியுடன் நடத்தவேண்டுமென்கிற விதமும் இருமுதுகுரவர்களாகிய பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய பற்பல அபூர்வ விஷயங்களும் மலிந்து பிரகாசிக்கின்றன. சிசுக்களின் விஷயத்தைப் பற்றி அநேக கல்விமான்களால் முன்னர் எழுதப் பெற்றிருப்பினும்,

> "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
> பெருப்பேதை அறிவாளோ."

என்ற தாயுமான வள்ளல் கருத்திற் கிணங்க பூரண கல்வி பாண்டித்தியம் வாய்ந்த பெண்பாலாகிய மாதுஸ்ரீ. டாக்டர் அன்னுதாமஸ் அவர்கள் எழுதியிருப்பதானது சாலச்சிறப்புடைத்தாம் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

வருட சந்தா ரூ. 3–0–0.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும், திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

தமிழ் வைத்தியம்: — இதனுடைய முதல் தொகுதியின் முதல் சஞ்சிகை வரப்பெற்றோம். இது கோவிற்பட்டி தமிழ் வைத்திய சங்கத்தினின்று ஷெ சங்க அமைச்சர் சுவாமி விருதை. சிவஞான யோகிகள் அவர்களால் வெளியிடப் பெறுகிறது. இப்பத்திரிகையில் யோகிகளுக்கு வேண்டிய பிர்ம்ம கற்பமும் உலகர்க்கு வேண்டிய மருந்துகளும் அவ்வவற்றின் விபரங்களும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. இன்னும் வைத்தியர்கள் தத்தமக்குள்ள சந்தேக விபரீதங்களை நிவர்த்தித்துக்கொள்ள ஓர் ஆசானைப்போன்று பிரகாசிக்கின்றது. தமிழ் சித்த மருத்துவங்களும் சித்தர் மருத்துவ முறையின் கருத்துகளும் வடமொழி ஆயுர்வேத மருந்துகளும் விளக்க உரையுடன் சித்த நூற்களின் மேறகோள் தாங்கி உலாவுவதானது தமிழ் நாட்டின் வைத்தியர்கட்கெதிர்பாராத ஓர் அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

வருட சந்தா ரூ. 3–0–0.

தமிழ் வைத்திய சங்கம், கோவிற்பட்டி, என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

வேதாந்த பாஸ்கரன்

என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

ஞாயமா! —— ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும், ஏனெனில் சிலர் எழுதிய சரடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ. 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

இப்பத்திரிகை ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் நமது விஜயபுரம் கருணாநிதி அச்சியந்திரசாலையில் பதிப்பித்துப் பிரசுரிக்கலாயிற்று.